செய்தி வெளியீடு எண்: 239 நாள்: 19.04.2013

**பத்திரிக்கைச் செய்தி**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தலைமையில், வெளிச்சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்த 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை செம்மையாக, சீரான முறையில் நடைபெறுவதை உறுதி செய்திடும் வகையில் மாநில அளவிலான அனைத்து மாவட்ட வழங்கல் அலுவலர்களின் கலந்தாய்வுக்கூட்டம் 19.04.2013 இன்று சென்னை சேப்பாக்கம், எழிலகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு அனைவருக்குமான பொது விநியோகத்திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு 3.16 இலட்சம் மெ.டன் விலையில்லா அரிசியை வழங்கிவருகிறது. மேலும் வெளிச்சந்தையில் அரிசியின் விலையை உடனடியாக கட்டுப்படுத்த தமிழக அரசின் நடவடிக்கையாக 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம் துவக்கப்படுமென்று 2.4.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்தார்கள். விலைக்கட்டுப்பாட்டு நிதியத்திற்கு வழங்கிய 50 கோடி ரூபாயை 100 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த நிதியத்திலிருந்து 25 கோடி ரூபாயை ஒதுக்கி வெளிச்சந்தையில் அரிசி உயர்வை கட்டுப்படுத்த அமுதம் அங்காடிகள்,கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள் மூலமாக ஒரு இலட்சம் மெ.டன் அரிசி கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் என்ற குறைந்த விலையில் வெளிச்சந்தையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யவும் உத்தரவிட்டார்கள்.

**மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 17.4.2013 அன்று சென்னை, நந்தனம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அமுதம் அங்காடியில், தங்களது திருக்கரங்களால் ஒரு கிலோ அரிசி 20 ரூபாய் என்ற விலையில் வெளிச்சந்தை அரிசி விற்பனை திட்டத்தை துவக்கி வைத்தார்கள். திட்டம் துவக்கப்பட்ட இரண்டு நாட்களிலேயே 28 அமுதம் அங்காடிகள் 143 கூட்டுறவு துறை அங்காடிகள் மூலமாக 1190 குவிண்டால் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது. தமிழகமெங்கும் மக்களிடையே இத்திட்டம் அமோக வரவேற்பு பெற்றுள்ளது.**

குறைந்த விலையில், நிறைந்த தரத்துடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அமுதம் அங்காடிகள்,கூட்டுறவு அங்காடிகள் மற்றும் புதிதாக திறக்கப்படவுள்ள சிறப்பு அங்காடிகள் ஆகியவற்றின் மூலம் இந்த வெளிச்சந்தை அரிசி விற்பனை நடைபெறும். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நடவடிக்கை வெளிச்சந்தையில் அரிசியின் விலையை நிலைப்படுத்த வழிவகுப்பதோடு, குறைந்த விலையில் பொதுமக்கள் வெளிச்சந்தை அரிசி பெறுவதற்கும் வழிவகுத்துள்ளது.

இத்திட்டம் சிறப்பான முறையில் எவ்வித குறைபாடுகளுக்கும் இடமளிக்காமல், தொய்வின்றி நடைபெறுவதை உறுதி செய்திடும் வகையில் அனைத்து மாவட்ட வழங்கல் அலுவலர்களும் மற்றும் உணவுத்துறையை சார்ந்த ஏனைய அலுவலர்களும் அற்பணிப்பு மனப்பான்மையுடன் செயல்பட வேண்டுமென்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

பொது விநியோகத்திட்ட கிடங்குகள் மற்றும் நியாயவிலை அங்காடிகளின் செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டுமென்றும், நியாயவிலை அங்காடிகளுக்கு தரமான பொருள்கள் மட்டுமே நகர்வு செய்யப்பட வேண்டுமென்றும், தரம் குறைந்த பொருள்கள் பெறப்பட்டால் அவற்றை அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யாமல், கிடங்குகளுக்கே திரும்ப அனுப்பி, தரமான பொருள்கள் மட்டுமே பெற்று வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

2013 ஆம் ஆண்டிற்கு உள்தாள்கள் இணைத்து குடும்ப அட்டைகள் புதுப்பிக்கும் பணி 1.1.2013 முதல் 31.3.2013 வரை நடைபெற்று இதுவரையில் 1 கோடியே 94 இலட்சம் குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தவிர்க்க முடியாத காரணங்களினால் குடும்ப அட்டைகளை புதுப்பிக்க இயலாதவர்கள் அவற்றை சம்பந்தப்பட்ட தாலுக்கா விநியோக அலுவலர்கள் மற்றும் உதவி ஆணையாளர் அலுவலங்களில் புதுப்பித்துக்கொள்ள ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் தவறாது பின்பற்றப்பட வேண்டுமென்றும், புதிய குடும்ப அட்டைகள் கோரி நிலுவையிலுள்ள மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுத்து 60 நாட்களுக்குள் தகுதியின் அடிப்படையில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்றும் உணவுத்துறை அமைச்சர் அறிவுறுத்தினார்.

மேலும், 4,900 கோடி ரூபாயை உணவுத்துறைக்கு மானியமாக ஒதுக்கி தந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் செயல்திட்டங்களின் பயன்கள் யாவும் உரியவர்களை, உரிய நேரத்தில் சென்றடைய வேண்டுமென்றும், அத்தியாவசியப் பொருள்களை பதுக்கி கடத்தும் சமூக விரோத சக்திகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை, வருவாய்த்துறை மற்றும் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறையினர் அனைவரும் இரவு ரோந்து பணிகளை அதிகரித்து,வாகன சோதனைகளில் ஈடுபட்டு,கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட வேண்டுமென்றும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கூறினார்.

இக்கலந்தாவுக்கூட்டத்தில் உணவுத்துறை செயலாளர், திருமதி.எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப.,தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன், இ.ஆ.ப., உணவுப்பொருள் குற்றப்புலனாய்வுத்துறை கூடுதல் காவல் துறை தலைவர் திரு.கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.பெ.சீதாராமன்,இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் துறை இணை ஆணையர் திருமதி.பி.இரமணசரஸ்வதி மற்றும் உணவு மற்றும் கூட்டுறவுத்துறை சார்ந்த அலுவலர்கள் அனைத்து மாவட்ட வழங்கல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**